**DEPOSITION OF WITNESS(CIVIL)**
**IN THE COURT OF I ADDITIONAL JUDGE.**

**Case No. : O.S. No.3600/2023. Date: 26.02.2026**

**PW- 1.**

Name : **திரு.வெங்கடேஷ்.**

Father's Name :

Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of February 2026.

---

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் என்ன பாரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுவதீனம் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆரம்பத்தில் 01.03.1939 ல் குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 01.03.1939 குத்தகை ஒப்பந்தம் பற்றி நேரடியாக எதுவும் தெரியுமா என்றால் நேரடியாக எதுவும் தெரியாது. இவ்வழக்கு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் C.S.No.402/2000 என தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதா. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது வாதி கூட்டு பங்கு நிறுவனத்தில் நான் பங்குதாரராக இல்லை என்றால் சரியல்ல. நான் பங்குதாரராக இருந்தேன். வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்னுடைய பெயர் பங்குதாரர் என காட்டப்பட்டுள்ளது. நான் பங்குதாரரான காலத்தில் இளவராக இருந்தேன். நான் மேஜர் ஆன பிறகு புதிதாக கூட்டுப்பங்கு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் ஏற்பட்டது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் அது பற்றி சரிபார்த்து தான் கூறமுடியும். நான் மேஜர் ஆன பிறகு ஏற்பட்ட புதிய கூட்டுப்பங்கு ஒப்பந்தம் குறித்து கூட்டுப்பங்கு நிறுவன பதிவாளரிடம் பதிவு

செய்யப்பட்டதா என்றால் நிறுவனத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து மட்டுமே பதிவாளரிடம் தெரிவித்து பதிவு செய்யப்படும். என்னுடைய தாத்தா அவருடைய 4 மகன்களுக்கும் வழக்கு சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் ஏற்படுத்திக்கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிபார்த்து தான் என்னால் கூறமுடியும். ஒரு பங்குதாரரான V.M.லட்சுமணமூர்த்தி என்பவருக்கும் வாதி கூட்டு பங்கு நிறுவனத்திற்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன பிரச்சனை ஏற்பட்ட பிறகு வாதி நிறுவனத்திலிருந்து பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி அதற்கான வாடகையை V.M.லட்சுமணமூர்த்தி வசம் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிபார்த்து தான் கூறயியலும். V.M.லட்சுமணமூர்த்தி இறந்த பிறகு அவருடைய மனைவி லலிதா வசம் வாடகை செலுத்தப்பட்டு வந்தது என்றால் சரிதான். அதன் பிறகு லலிதாவிற்கும் வாதி கூட்டுப்பங்கு நிறுவனத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியலல். லலிதாவுடன் பிரச்சனை ஏற்படவில்லை. நாங்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் பிரதிவாதி மேற்படி லலிதாவிற்கு வாடகை செலுத்தி வந்தார். ஒரு கட்டத்தில் நாங்களும் வாதி நிறுவனமும் லலிதாவும் வாடகை கோரினோம் என்றால் நாங்கள் கொடுத்த தகவலை திரும்பப்பெற்றுக்கொண்டதால் வாடகையை திரும்ப வாங்கினோம். அதை லலிதா ஏற்றுக்கொள்ளாமல் அவரும் வாடகை கோரினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவனமும், லலிதாவும் வாடகை கேட்டதால் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவு கேட்டு பிரதிவாதி சென்னை, மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் interpleader வழக்கு O.S.No.5833/2000 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். லலிதா இறந்த பிறகு அவருடைய

குழந்தைகளான பிரேம் கிஷோர், சைலேஷ் மற்றும் சரளா ஆகியோர் வாதி கூட்டப்பங்கு நிறுவனத்தின் மீதும் மற்ற பங்கு தாரார்க ள் மீதும் பாகப்பிரிவை கேட்டு C.S.No.208/1992 என்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு மாநகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதல் ஆகி அ.வ.எண்.3601/2023 என நடந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது. அந்த வழக்கில் வாதி கூட்டுப்பங்கு நிறுவனத்தை கலைக்கவேண்டும் என்றும், வழக்கு சொத்து உள்ளிடம் சொத்துக்களில் சுவதீனம் வழங்கவேண்டும் என பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அந்த பரிகாரங்களை நான் மறுக்கிறேன். அ.வ.எண்.3306/1991 மற்றும் 2123/1993 வழக்களில் ஏற்பட்ட தீர்ப்புகளுக்கு எதிராக இரண்டாவது மேல்முறையீடு தற்போது நிலுவையில் இருந்து வருகிறது.

அ.வ.எண்.3306/1991 என்ற வழக்கு பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண்.2123/1993 என்ற வழக்கு வாதி நிறுவனம் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். மேற்சொன்ன இரு வழக்குகளிலும் சொத்திற்கு யார் உரிமையாளர் என்ற பிரச்சனை கிடையாது என்றால் அந்த வழக்கு தீர்பில் என்ன பரிகாரம் உள்ளது என்ற விவரத்தை நான் சரிபார்த்து தான் கூறியியலும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்சொன்ன வழக்குகளில் வழக்கு சொத்து வாதிக்கு உரிமைப்பட்டது என நான் கூறியுள்ள விவரம் ஆவங்களைப்பற்றி தெரியாமல் கூறியுள்ளளேன் என்றால் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்யும்போது வழக்கறிஞர் ஆவணங்களை காட்டினார். தற்போது அவைகள் ஞாபகமில்லை. மேற்சொன்ன வழக்குகளில் பொது தீர்ப்புரை வா.சா.ஆ.2 ஆகும்.

வா.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்கு சொத்தில் உரிமை வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என எந்த பத்தியில் கூறப்பட்டுள்ளது என்றால் எனக்கு தமிழ் படிக்க வராது வழக்கறிஞர் படித்து காண்பித்தார். என்னுடைய தாய் மொழி தெலுங்கு. வா.சா.ஆ.2 தீர்ப்புரையில் வழக்கு சொத்தின் உரிமை பற்றி முடிவு ஏற்படவில்லை என்றும், அந்த விவரங்கள் பற்றி தெரியாமல் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.5833/2000 வழக்கு தாக்கல் செய்வதற்கு இவ்வழக்கு பிரதிவாதி உரிமை மூலம் அந்த காலகட்டத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு எண்.28/2026 என்ற மேல் முறையீடு நடந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.3306/1991 என்ற வழக்கில் வழக்கு சொத்து வாதி நிறுவனத்திற்கு சொந்தமானது என நாங்கள் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

இவ்வழக்கில் பிரதிவாதி இவ்வழக்கில் பிரிவு 9 ன் கீழ் மனு தாக்கல் செய்து வழக்கு சொத்தை அவர் பெயருக்கு விற்பனை செய்யவேண்டும் என்று கேட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாதி பெயரிலுள்ள உரிமையை பிரதிவாதி மறுத்துள்ளார் என நான் கூறியுள்ள விவரம் சரிதான். நாளது தேதி வரை வழக்கு சொத்து வாதி கூட்டுப்பங்கு நிறுவனத்தின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் லட்சுமண மூர்த்தி வாரிசுகளுக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. லட்சுமண மூர்த்தி கூட்டுப்பங்கு நிறுவனத்திலிருந்து விலகியதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ 8 ல் உள்ள படிவம் 6 ல் அந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. லட்சுமண மூர்த்தி கூட்டுப்பங்கு நிறுவனத்திலிருந்து விலக்கப்பட்டார் என்ற விவரம் வா.சா.ஆ.8 ல் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. கூட்டுப்பங்கு

நிறுவன பதிவாளர் வசம் தாக்கல் செய்யும் ஆவணங்கள் அடிப்படையில் "அ" படிவம் வழங்கப்படும் என்றால் சரிதான். நாங்கள் ஆவணங்களை உற்பத்தி செய்து பதிவாளரிடம் தாக்கல் செய்துள்ளோம் என்றும் அதன் காரணமாக தான் C.S.No.208/1992 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தற்போது அ.வ.எண்.3601/2023 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரை எங்களுக்கு பாதகமாக உள்ள காரணத்தால் இவ்வழக்கில் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் என்னுடைய தாத்தா காலி இடமாக வழக்க சொத்தை பிரதிவாதிக்கு வாடகை விட்டார் என கூறப்பட்டுள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கு சொத்தில் உளள்ள கட்டிடம் வாதிக்கு சொந்தமானது என்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.2 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போன்று கட்டிடம் வாதிக்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கு ஆவங்கள் எதையும் நான் முந்தைய வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 வது மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு இயலாது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dt. 26.02.2026.

I Addl. District Judge.